**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ALANGUDI**
**Deposition of witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**CC No. 140 /2025**

**Deposition of witness for PW.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ராஜமோகன் | **வயது** | : | 51 |
| **தகப்பனார் பெயர்** | : | அடைக்கலம் | **மாவட்டம்** | : | தஞ்சாவூர் |
| **கிராமம்** | : | நெய்வேலி | **தொழில்** | : | கட்டிட மேற்பார்வையாளர் |

Solemnly affirmed by Selvi.B.Sendhurdevi, Examiner of this court in accordance with the provisions of Act X of 1873.
**(Accused present. Counsel Present)**
**(Date: 24.02.2026)**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aadhaar Card of Witness verified.**

**சாட்சியானர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

**1.** நான் தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தாலுகா, நெய்வேலியில் குடியிருந்து வந்து சென்னையில் கட்டிட மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். 01.09.2025 அன்று எனது அண்ணன் சின்னத்துரைக்கு விபத்து ஏற்பட்டுள்ளதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் PMCH மருத்துவமனைக்கு சென்று எனது அண்ணனை பார்த்தேன். அவர் சுயநினைவின்றி இருந்தார். மேல்சிகிச்சைக்காக எனது அண்ணனை திருச்சி அப்போலோ மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு சிகிச்சை முடிந்து அன்று இரவே வீட்டிற்கு எனது அண்ணனை அழைத்து வந்துவிட்டோம். மறுநாள் தொடர் சிகிச்சைக்காக TMCH மருத்துவமனைக்கு எனது அண்ணனை அழைத்து சென்றேன். அங்கு 3 நாட்கள் சிகிச்சைக்கு பின்னர் 02.09.2025 அன்று எனது அண்ணன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்த எனது

**அண்ணனை யார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, கண்ணன் என்பவர்தான் சேர்த்தார்.**

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது.

(ஒம்/-எஸ்.சக்திநாராயணமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
ஆலங்குடி.